இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை– 641 003.
மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 04.11.2026

மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 08°செ -12°செ ஆகவும் பதிவானது.

1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய சில இடங்களில் மிதமானது முதல் கன மழையும், மற்ற பகுதிகளில் மிதமான மழையும் எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 28-32°செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 09-23°செ ஆகவும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 06-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெரும்பாலும் காற்று வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

- *மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வரும் வாரத்தில் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 கி.மீ வரையிலும் வீசக்கூடும்.*
- *மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் எல்லாப் பயிர்களும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.*
- *தொடர் மழையால் பருத்தியில் பூ அல்லது பூ மொட்டுகள் உதிர்வதை தடுக்க நாப்தலின் அசிடிக் ஆமிலம் ஒரு லிட்டர் தண்ணீரில் 40 மில்லி கிராம் கலந்து தெளிக்கவும்.*
- *மழையுடன் காற்றின் வேகம் 10 கி.மீ வரை எதிரபார்க்கப்படுவதனாலும் 5 மாதங்களுக்கு மேலான வாழையில் மூங்கில் கழி உபயோகித்து முட்டு கொடுக்கவும்.*
- *தொடர்ந்து காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதுடன் தூறல் மழையும் இருப்பதால் திராட்சையில் அடிச்சாம்பல் நோய் வர வாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தேவைப்பட்டால் 1 சத போர்டோகலவையை தெளித்து கட்டுப்படுத்தவும்.*
- *தென்னை மற்றும் மா மரங்களை சுற்றியுள்ள பாத்திகளை ஆழப்படுத்துவதன் மூலம் மழை நீரினை வீணாகாமல் சேகரிக்கலாம்.*
- *பண்ணை கூடாரங்களின் அருகில் தேங்கிய நீரினால் ஆடு மற்றும் மாடுகளுக்கு நீலநாக்கு நோய் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே அருகிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் முறையான தடுப்பூசி போட்டுக் கொள்ளவும்*
- *தீவனத்தில் ஈரப்பதம் படாமல் பாதுகாப்பாக சேமிக்க வேண்டும். இதன் மூலம் அஃப்ளாடாக்சின் எனப்படும் பூஞ்சை நச்சு உருவாவதைத் தவிர்ககலாம்.*

2. காவிரி டெல்டா மண்டலம்

காவிரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர், திருச்சி மற்றும் மயிலாடுதுறை ஆகிய இடங்களில் 04.11.2026 முதல் 08.11.2026 வரை இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 - 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24- 28°செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 08-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் கிழக்கு வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

- *வரும் நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் நெற்பயிர் நடவு செய்த வயல்களில் தேவைக்கு அதிகமான நீரை முறையாக வடித்து பயிரை பாதுகாக்கவும். மழையின் அளவை*

பொறுத்து உரமிடுதல், களைக்கொல்லி இடுதல் மற்றும் பூச்சி மருந்து தெளித்தல் ஆகியவற்றை மேற்கொள்ளவும்.

- தற்போது நிலவும் வானிலையின் காரணமாக கால்நடை தொழுவத்திலும் அதன் சுற்றியுள்ள பகுதிகளிலும் தண்ணீர் தேங்குவதை தவிர்த்து வடிகால் வசதி ஏற்படுத்தவும். தீவன பொருட்களை மழை நீரில் நனையாமல் பாதுகாக்கவும். வெளிப்புற ஒட்டுண்ணிகளை தவிர்க்க தேங்கி நிர்க்கும் மழை நீரை கால்நடைகள் குடிப்பதை தவிர்க்கவும்

3. தெற்குமண்டலம் -1

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான தூத்துக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்டங்களில் 04.11.2026 மற்றும் 08.11.2026 ஆகிய நாட்களில் இலேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 30-35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-26°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 80-100 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 50-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 08-12 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையில் இருந்து வீசும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் அறிவுரை

- நெல்லில் தண்டுத் துளைப்பானைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டேருக்கு கீழேகுறிப்பிடப்பட்டுள்ள பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும். அசிபேட் 75% SP– 670-1000 கிராம் அல்லது அசிபேட் 95% SG– 590 கிராம் அல்லது அசாடிராக்டின் 0.03% 1000 மிலி என்ற அளவில் தெளிக்கவும்.
- இலைச்சுருட்டு புழுக்களை கட்டுப்படுத்த ஒருஹெக்டேருக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும். அசிபேட் 75% SP– 666 முதல் 1000 மிலி, அல்லது அசாடிராக்டின் 0.03% EC1000 மிலிஅல்லதுகுளோர்பைரிபாஸ் 20% EC 1250 மிலிஎன்றஅளவில் தெளிக்கவும்.
- நாள் 3 (06.11.2026) முதல் நாள் 5 (08.11.2026) வரையிலான நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்பதால் பயிர் நிலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, பயிர் நிலங்களில் தேங்கியுள்ள உபரி மழைநீரை வெளியேற்றவும்.
- கரும்பில் சிவப்பு அழுகல் நோயைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட தூருகளை ஆரம்ப நிலையிலேயே அகற்றிவிட்டு மண்ணில் 0.1 சதம் கார்பெண்டாசிம் 50 WP கரைசலை ஊற்ற வேண்டும்.
- இடைக்கணுத் துளைப்பானைக் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணியான ட்டிகோகிரம்மா கைலோனிஸ் ஹெக்டேருக்கு 2.5சிசி வீதம் நான்காவது மாதத்திலிருந்து 15 நாட்கள் இடைவெளியில் மொத்தம் ஆறு முறை வெளியிட வேண்டும்
- நாள் 2 (05.11.2026) முதல் நாள் 5 (08.11.2026) வரையிலான நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்பதால் பயிர் நிலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, பயிர் நிலங்களில் தேங்கியுள்ள உபரி மழைநீரை வெளியேற்றவும்.
- வாழையில் ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட வயதுடைய வாழை மரத்திற்கு முட்டுக்கொடுக்கவும். வழைப்பயிரின் விளைச்சலையும் தரத்தையும் அதிகரிக்க நடவுசெய்த 3-5வது மற்றும் 7வது மாதங்களில் துத்தநாகசல்பேட் 0.5 சதம், தாமிரசல்பேட் 0.2 சதம் மற்றும் போரிக் அமிலம் 0.2 சதம் ஆகிய நுண் ஊட்டச்சத்துக்களைத் தெளிக்கவும். மேலும் 25 கிலோ துத்தநாக சல்பேட்டை அடிஉரமாகவும் இடவும்.
- நாள் 3 (06.11.2026) முதல் நாள் 5 (08.11.2026) வரையிலான நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்பதால் பயிர் நிலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, பயிர் நிலங்களில் தேங்கியுள்ள உபரி மழைநீரை வெளியேற்றவும்.
- உளுந்து மற்றும் பாசிப்பயறுகளில் களைகளைக் கட்டுப்படுத்த விதைத்த 20வது நாளில் ஒருமுறை கையால் களை எடுக்கவும். அல்லது விதைத்த 15-20வது நாட்களில் 'குவிசலோபாப் எத்தில்' மற்றும் இமாசெதாபைர் 50 கிராம் / ஹெக்டேர் ஆகியவற்றை களைக்கொல்லியாகத் தெளிக்கவும்.
- நாள் 3 (06.11.2026) முதல் நாள் 5 (08.11.2026) வரையிலான நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்பதால் பயிர் நிலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, பயிர் நிலங்களில் தேங்கியுள்ள உபரி மழைநீரை வெளியேற்றவும்.
- பருத்தியில் அசுவினி பூச்சிகளைக் கட்டுப்படுத்த பின்வரும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும். அசிட்டாமிப்ரிட் 20 % SP 50 கிராம்/ஹெக்டேர் அல்லதுஅசாடிராக்டின்

0.03% EC *2500* மிலி/எக்கர் அல்லது புப்ரோஃபெசின் *25*% SC *1000* மிலி/ஹெக்டேர் என்றவிகிதத்தில் தெளிக்கவும்.

- இலைப்பேன் தாக்குதலைக் கட்டுப்படுத் தபின்வரும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும். இமிடாக்குளோப்ரிட் *200* ளுடு*100* மிலி/ஹெக்டேர் அல்லதுஅசிட்டாமிப்ரிட் *20*% SP*50* கிராம்/ ஹெக்டேர் அல்லது அசாடிராக்டின் *0.03*% EC *2500-5000* கிராம்/ ஹெக்டே அல்லது புப்ரோஃபெசின் *25*% SC *1000* மிலி/ஹெக்டேர் என்றவிகிதத்தில் தெளிக்கவும்.
- நாள் *3 (06.11.2026)* முதல் நாள் *5 (08.11.2026)* வரையிலான நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்பதால் பயிர் நிலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, பயிர் நிலங்களில் தேங்கியுள்ள உபரி மழைநீரை வெளியேற்றவும்.
- நிலக்கடலையில் களைக்கொல்லி பயன்படுத்தாத நிலையில் விதைத்த *20* மற்றும் *40*வது நாட்களில் இரு முறைகையால் கொத்திகளை எடுக்கவும். நாள் *3 (06.11.2026)* முதல் நாள் *5 (08.11.2026)* வரையிலான நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்பதால் பயிர் நிலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, பயிர் நிலங்களில் தேங்கியுள்ள உபரி மழைநீரை வெளியேற்றவும்.
- மக்காச்சோளத்தில் களைகளைக் கட்டுப்படுத்தவிதைத்த *20-25*வது நாட்களுக்குப் பிறகுஹெக்டேருக்கு *1* கிலோஎன்றஅளவில் '*2,4*-D' களைக்கொல்லியையபயன்படுத்தவும். இதற்குஒருஹெக்டேருக்கு *500* லிட்டர் தண்ணீர் கலந்து தட்டையானவிசிறி வடிவ துளைபொருத்தப்பட்ட தெளிப்பானை பயன்படுத்தி தெளிக்கவும்.
- படைப்புழுவைக் கட்டுப்படுத்தஒருஹெக்டேருக்குகீழேகுறிப்பிடப்பட்டுள்ளவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கவும். அசாடிராக்டின் *1*% EC *20* மிலி/*10* லிட்டர் தண்ணீர் அல்லதுதியோடிகார்ப் *75* WP *20* கிராம்/*10* லிட்டர் தண்ணீர் அல்லதுஎமாமெக்டின் பென்சோயேட் *5* SG *5* கிராம்/*10* லிட்டர் தண்ணீர் என்றவிகிதத்தில் தெளிக்கவும்.
- நாள் *3 (06.11.2026)* முதல் நாள் *5 (08.11.2026)* வரையிலான நாட்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்பதால் பயிர் நிலங்களில் தண்ணீர் தேங்க வாய்ப்புள்ளது. எனவே, பயிர் நிலங்களில் தேங்கியுள்ள உபரி மழைநீரை வெளியேற்றவும்.

தெற்கு மண்டலம் -*2*

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நவம்பர் *5,6,7*ம் தேதிகளில் மிதமான மழையும் மற்றும் *8*ம் தேதி சற்றே கனமழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்சவெப்பநிலை *31-35*°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை *22-27*°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் *70-100* சதவிகிதமாகவும் மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் *40-90* சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு *08-16* கி.மீ வேகத்தில் வீசக்கூடும். பெரும்பாலும் காற்று தென்கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரை

நெல்

சமீபத்தில் பெய்த மழை காரணமாக விளைநிலங்களில் தண்ணீர் தேங்கி இளம் பயிர்கள் மூழ்கி இருந்தால், தழைச்சத்து மற்றும் துத்தநாக சத்துக்களை எடுத்துக் கொள்வதில் பயிர்களுக்கு சிரமம் இருக்கும். இதனால் பயிர்களின் இலைகள் வெளிர் மஞ்சள் நிறத்திலோ அல்லது மஞ்சள் நிறத்திலோ காணப்படும். இந்த பயிர்கள் உடனடியான பச்சையத்தினை திரும்ப பெற்று ஒளிச்சேர்க்கை செய்வதற்கு, தேங்கியுள்ள நீரை உடனடியாக வடியச் செய்ய வேண்டும். முதலில் 2 கிலோ யூரியா மற்றும் 1 கிலோ துத்தநாக சல்பேட் இவற்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து இலைவழியாக கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்கவும். ஒரு சில இடங்களில் பயிர்கள் அழுகி காணப்பட்டால். அந்த இடத்தில் புதிய நாற்றுக்களை (ஊடு நாற்று) நடவு செய்து இடைவெளியை நிரப்ப வேண்டும்.

வாழை

அதிக மழை காரணமாக வாழை மரங்கள் சாய்வதற்கான வாய்ப்புள்ளது. முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும். காய்ந்த சருகுகளை அப்புறப்படுத்தவும். 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கும் தார்விட்ட மரங்களுக்கும் முட்டுக்கால் வசதியினை ஏற்படுத்தவும்.

தென்னை

அடுத்த சில நாட்களுக்கு அதிக மழை எதிர்பார்க்கப்படுவதால் தென்னையில் காய்ந்த மற்றும் முதிர்ந்த காய்களை பறித்துவிடவும் பழைய காய்ந்த மட்டைகளை அகற்றி விடவும். முறையான வடிகால் வசதியினை ஏற்படுத்த வேண்டும்.

பருத்தி

அடுத்த சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதால் மானாவரி மற்றும் இரவையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்திக்கு தகுந்த வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். உரம் வைத்தல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மழை நிற்கும் வரை தள்ளி வைக்கவும்.

தக்காளி

நிலத்தில் சரியான வடிகால் வசதியினை ஏற்படுத்தவும். விதைத்தல், உரமிடுதல், பூச்சி மருந்து தெளித்தல் போன்ற பணிகளை தவிர்க்கவும் அல்லது ஒத்திவைக்கவும். முதிர்ந்த காய்கள் அல்லது பழங்கள் நிலத்திலேயே வீணாவதை தவிர்க்க உடனடியாக அறுவடை செய்து பாதுகாப்பான இடத்தில் வைக்கவும்.

அவரை:

கனமழை மற்றும் காற்று காரணமாக கொடிவகை பயிர்களில் பந்தல், கம்பி மற்றும் கால்கள் முறிந்துவிட வாய்ப்புள்ளது. பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும்.

கால்நடை

இடி மின்னலுடன் கூடிய கனமழை வருவதற்கான வாய்ப்பள்ளதால், கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்புவதை தவிர்க்கவும். மின்கம்பம் மற்றும் மரத்தடியில் கட்டுவதை தவிர்;த்து பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். வைக்கோல் மற்றும் மக்காச்சோளம் போன்ற தீவன பொருட்களை நன்கு உலர வைத்து கால்நடைகளுக்கு கொடுப்பதன் மூலம் அப்ளாடாக்ஸின் என்ற நச்சின் தாக்கத்திலிருந்து தங்களது கால்நடைகளைப் பாதுகாக்கலாம்.

4. மலைப்பிரதேச மண்டலம்

மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 16-20°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 09-13°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90-100 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 80-90 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 04-06 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் அறிவுரை

- கேரட்டில் நூற்புழு மேலாண்மைக்கு, நடவு செய்யும் போது எக்டருக்கு 1 டன் வேப்பம் புண்ணாக்கு மண்ணில் இடவும். கடுகு செடிகளை உயிரி புகையாக்குதல் மற்றும் வேப்பம்புண்ணாக்கு ஒரு ஹெக்டருக்கு 250 கிலோ இடுதல், பர்ப்யூரோசிலியம்லிலாசினம் @ 5 கிலோ/எக்டர் என்ற அளவில் இட வேண்டும்.
- உருளைக்கிழங்கு பயிரில் இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த, • நடவு செய்த 45, 60 மற்றும் 75 நாட்களில் மான்கோசெப் @ 2 கிராம்/லி அல்லது குளோரோதலோனில் @ 2 கிராம்/லி என்ற அளவில் இலைவழி, மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- வாழை: i)5 மாத வயதுள்ள மரங்களுக்கு மரக் கம்பங்களைப் பயன்படுத்தி ஆதரவு அளிக்கவும். ii) வடிகால் வசதி செய்து, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்துவதை தவிர்க்கவும். iii)அழுகும் மற்றும் அழுகிய இலைகளை அகற்றுதல் மற்றும் அழித்தல்
- தேயிலையில் கொப்புள கருகல் நோய் மேலாண்மை முறைகள்:
- பாதிக்கப்பட்ட இலைகள் மற்றும் தளிர்களை கவாத்து மூலம் நீக்கி அழிக்கவும் • ஹெக்ஸகோனசோல்@ 200 மிலி + காப்பர் ஆக்ஸிகுளோரைடு@ 210 கிராம்/ எக்டருக்கு 5

நாட்கள் இடைவெளியில் (அல்லது) • காப்பர் ஆக்ஸிகுளோரைடு@ 210 கிராம் + புரோபிகோனசோல்@ 200 மிலி/ எக்டருக்கு 10 நாட்கள் இடைவெளியில், குறிப்பாக ஜூன்-செப்டம்பர் மற்றும் அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தெளிக்கவும் • எளிதில் நோய் பாதிக்கக் கூடிய ரகங்களை தவிர்த்து, நோய் எதிர்ப்பு ரகங்களையிரிடவும்.

- மத்திய பூச்சிக்கொல்லி வாரியப் பரிந்துரைகள் • பின் வரும் மருந்துகளில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும்.
- ஹெக்ஸகோனசோல் 5% EC @ 200ml/ha (அல்லது) • ப்ரோபிகோனசோல் 25% EC @ 125-250ml/ha (அல்லது) • கார்பென்டாசிம் 12%+ மான்கோசெப் 63% WP @ 1250g/ha (அல்லது) • ஹெக்ஸகோனசோல் 4% + ஜினெப் 68% WP @ 625g/ha என்ற அளவில், மழை இல்லாத நேரங்களில் தெளிக்க வேண்டும்.
- கால்நடைகள்: i) மின்னல் மற்றும் இடியுடன் கூடிய மழையிலிருந்து உங்கள் விலங்குகளைப் பாதுகாக்கவும். ii) விலங்குகளை வெளியில் மேய்க்க அனுமதிக்காதீர்கள். iii) மின் கம்பங்கள் மற்றும் மரங்களுக்கு அடியில் கால் நடைகளை கட்ட வேண்டாம். iv) உள்ளூர் கால் நடை மருத்துவருடன் கலந்தாலோசித்து, உங்கள் கால்நடைகளுக்கு பருவ கால நோய்களுக்கு எதிராக தடுப்பூசி போடுங்கள்.

5. வட மேற்கு மண்டலம்

*வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் **04.11.2026** முதல் **06.11.2026** வரை இலேசான மழைக்கும் மற்றும் **07.11.2026** மற்றும் **08.11.2026** மிதமான மழைக்கும் வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை **30-31**°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை **24-25**°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் **90** சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் **60** சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு **06-10** கி.மீ வேகத்தில் பெரும்பாலும் காற்று கிழக்கு மற்றும் வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.*

வேளாண் அறிவுரை

- *முன்பனிக்காலம் துவங்கியுள்ளதால் அதிகாலை நேரங்களில் லேசான பனி தென்படுகிறது. இதன் காரணமாக ஆவணி பட்டத்தில் விதைப்பு செய்துள்ள நிலக்கடலையில் பரவலாக இரும்புச்சத்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதன் முக்கிய அறிகுறியானது இளம் இலைகளில் நரம்புகள் தவிர மற்ற பகுதிகள் இளம் பச்சையாக மாறும், தீவிர பற்றாக்குறையினால் மஞ்சள் நிறப் பகுதிகளில் பழுப்பு நிறத் திட்டுகள் ஏற்பட்டு இலைகள் முழுவதும் வெளிரிய மஞ்சள் நிறமாக தோற்றமளிக்கும். எனவே இதன் பாதிப்பை நிவர்த்தி செய்ய, **1** சதவீத இரும்பு சல்பேட் கரைசலை இலைவழியாக **10** நாட்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். மேலும் பனிப்பொழிவால் நோய் தாக்குவதற்கு வாய்ப்புள்ளதால், முன்னெச்சரிக்கையாக கார்பன்டசிம் மற்றும் மேன்கோசெஃப் கலந்த கலவையை ஒரு ஏக்கருக்கு **250** கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கலாம்.*
- *தற்போது நிலவும் தட்பவெப்ப சூழ்நிலையில், புரட்டாசி பட்டத்தில் பயிரிட்ட பருத்தி பயிரானது சப்பைப் பிடித்து, பூ பூக்கும் பருவத்தில் உள்ளதால் இளஞ்சிவப்பு காய்ப்புழு தாக்குவதற்கு வாய்ப்பு உள்ளது. எனவே பருத்தி விவசாயிகள் அதன் பாதிப்பை கட்டுப்படுத்தி பொருளாதார சேதத்தை தவிர்க்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புரோப்பனோபாஸ் என்ற இரசாயன பூச்சிக்கொல்லி மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு **1** மி. லி என்ற அளவில் கலந்து சப்பையின் மீது நன்கு படும்படி காலை அல்லது மாலை வேளைகளில் தெளிக்க வேண்டும்.*
- *நிலவும் மாறுபட்ட காலநிலையில் சின்ன வெங்காயம் நடவு செய்துள்ள விவசாயிகள் சின்ன வெங்காயத்தின் எடை மற்றும் மகசூலை அதிகரிக்க **20** நாட்களுக்கு ஒரு முறை வீதம் நடவு செய்த **2** மாதங்கள் வரை ஏக்கருக்கு **200** கிலோ நன்கு மட்கிய தொழு உரத்துடன் தலா **4** கிலோ டிரைக்கோடெர்மா விரிடி, பேசில்லஸ் சப்டிலிஸ் மற்றும் வேம் போன்ற உயிரி இடுபொருட்களை கலந்து தூரில் இடுவதால் வெங்காயத்தின் வளர்ச்சி மேம்படுவதுடன் குமிழ் அழுகல் நோயினைத் தவிர்க்கலாம்.*

கால்நடை ஆலோசனைகள்

<u>கால்நடைகளுக்கான மழைக்கால மேலாண்மை முறைகள்</u>

- தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை துவங்கி மாவட்டம் முழுவதும் கடந்த சில நாட்களாக விட்டு விட்டு லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது.
- மேலும் அடுத்த சில தினங்களுக்கும் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால், இந்த பருவமழைக் காலங்களில் காற்றில் ஈரப்பதம் அதிகமாக இருப்பதாலும், ஆங்காங்கே மழைநீர் தேங்குவதாலும் கால்நடைகளில் அக ஒட்டுண்ணிகள், ஈக்கள் மற்றும் கொசுக்களின் தாக்கமும் அதிகமாக காணப்படும்.
- எனவேஇ பண்ணையாளர்கள் அவைகளிடமிருந்து கால்நடைகளைப் பாதுகாத்துக்கொள்ள அந்தி மாலைப் பொழுதிலும், தண்ணீர் அதிகமாக தேங்கி நிற்கும் குளம் மற்றும் குட்டை போன்ற நீர்ப்பாசன பகுதிகளிலும் மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- மேலும் கால்நடைகளின் கொட்டகையைச் சுற்றிலும் மழைநீர் ஏதும் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- கொட்டகையின் உள்ளே மாலைப் பொழுதில் ஈக்கள் மற்றும் கொசுக்களை விரட்ட புகைமூட்டம் அல்லது பூச்சிக்கொல்லி கலந்த ரசாயனங்களைக் கொண்டு ஈக்கள் மற்றும் கொசுக்களை விரட்டலாம்.
- மேலும் பருவமழை காலங்களில் இவ்வாறு செய்வதன் மூலம் கால்நடைகளில் ஈக்கள் மற்றும் கொசுக்களின் மூலமாக பரவும் ஒட்டுண்ணி மற்றும் நச்சுயிரி நோய்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம்.

6. வடகிழக்கு மண்டலம்

வரும் நாட்களில் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், ராணிபேட்டை, திருப்பத்தூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் வரும் வாரத்தில் வானம் தெளிவாக காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 25°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 21°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை நேர காற்றின் ஈரப்பதம் 70-90 சதவிகிதமாகவும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 40--80 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரி காற்றின் வேகம் 04-14 கி.மீ ஆகவும் பெரும்பாலும் காற்று வட கிழக்கு, தென் கிழக்கு மற்றும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வேளாண் அறிவுரைகள்

- அறுவடைக்கு தயாராக உள்ள நெற்பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். நாற்றங்கால் வயலுக்கு முறையான வடிகால் வசதி ஏற்படுத்த வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்றவற்றை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும்.
- தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில இலைப்பேன் தாக்கம் தென்பட வாய்ப்புள்ளது. இலைப்பேன் தாக்கிய இளம் பயிர்களின் இலைகள் சுருண்டு நிறம் மாறி காணப்படும். நாற்றுக்களின் இலைகளில் மஞ்சள் நிறகோடுகள் காணப்படும். இதன் அறிகுறிகள் நாற்று பருவத்திலும், நடவு வயலிலும் காணப்படும்.
- இலைப்பேன் தாக்கம் அதிகமாகும் போது இலைகள் வெள்ளை நிறத்தில் மாறிவிடும். நாற்று வயலில் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த 20 சென்ட் நாற்றங்காலுக்கு தயாமீதாக்க்ஷம் 8.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும். நடவு வயலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு அசாடிராக்டின் 400 மிலி (10000 பி.பி.எம்) அல்லது தயாமீதாக்க்ஷம் 4.0 கிராம் வீதம் தெளிக்க வேண்டும்
- தற்பொழுது நிலவி வரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அதை கட்டுப்படுத்த கார்போசல்பான் 400 மிலி / ஏக்கர் அல்லது கார்டாப் ஹைட்ரோகுளோரைடு 600 கி/ ஏக்கர் என்ற அளவில் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்கவும்.
- இளம் நாற்றங்காலில் இலைபேன் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் பூச்சி தாக்கத்தின் அறிகுறிகள் தென்படுமாயின் பாஸ்போமிடான் 40 எஸ்.எல் 50 மி.லி தெளிக்கலாம். நெல் பயிரில் இலையுறை கருகல் நோய் தாக்க வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நோயின் அறிகுறிகள் தென்படும் போது வேப்ப எண்ணெய் 3% என்ற அளவில் தெளிக்கலாம்.
- அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்கவும். முதிர்ச்சி அடைந்த நிலக்கடலை பயிர்களை அறுவடை செய்து கிடங்குகளில் சேமித்து வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

- நல்ல காற்றோட்ட வசதியை உறுதி செய்ய காய்ந்த மற்றும் வளைந்த இலைகளை அகற்ற வேண்டும். மேலும் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு ஊன்றுகோல் அமைக்க வேண்டும்.
- இலேசான மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக வீச வாய்ப்புள்ளதால் வாழை மரங்கள் முறிய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் ஐந்து மற்றும் ஐந்து வயதிற்கு அதிகமாக இருக்கும் வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

கால்நடை ஆலோசனைகள்

- கால்நடைகொட்டகைகளில் தரையை சுத்தமாகவும் தண்ணீர் தேக்கம் இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும. மேலும் வாரம் ஒரு முறை பிளிச்சிங்பௌடர் தூவிவிட வேண்டும். இது நோய்த் தொற்றை தடுக்க உதவும்.
- கால்நடை கொட்டகைகளில் மின்சாரம் கசிவதைக் தவிர்க்க தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும்.
- குளம்பு அழுகல் நோயை தவிர்க்கவும், ஓட்டுண்ணி நோயை தவிர்க்கவும் மழை பெய்யும் போது கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்கக்கூடாது
- ஆட்டுக்குட்டிகளை நுரையீரல் அழற்சி நோயிலிருந்து பாதுகாக்க, கதகதப்பான கொட்டகை மற்றும் ஈரத்தன்மை இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும்.
- பன்றிக்குட்டிகளை குளிர் தாக்காமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தற்போது உள்ள உயர்ந்த மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைகள் முயல்களின் உற்பத்திக்கு எதுவாக இருப்பதால் அவற்றை தனி கூண்டு முறையிலோ , கூட்டமாகவோ இனப்பெருக்கதிற்கு அனுமதிக்க வேண்டும்.
- கோழிகளை தாக்கும் நாடாப்புழுக்களுக்கு இடைநிலை பருவங்களாக விளங்கும் உயிரிகள் தண்ணீர் மூலம் பரவும் என்பதால் கொட்டகையை சுற்றியுள்ள மழைநீரை அகற்ற வேண்டும்.

7. அதிக மழை பெறும் மண்டலம்

ஏதிர் வரும் ஐந்து நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிக பட்சவெப்பநிலை 30-33^{0}செ. ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 23-26^{0}செ ஆகவும், வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். காலை நேர காற்றின் ஈரப்பதம் 80-90 % பதிவாக வாய்ப்புள்ளது. மதியம் நேர காற்றின் ஈரப்பதம் 50 - 80% பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 12-16 கி.மீ வேகத்தில் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

வேளாண் அறிவுரைகள்

- அறுவடை செய்யப்பட்ட வாழை தார்களை உலர்வான இடங்களில் சேமித்து வைக்கவும். இதனால் மழையினால் ஏற்படும் நோய்களை தடுக்கலாம்.
- இரப்பரில் நெகிழி மழை தடுப்பான்களை மரத்தின் பால் வடியும் பகுதிக்கு மேல் பொருத்தி மழை காலத்திலும் பால் வெட்டலாம்.
- தோட்டங்களில் மழை நீர் தேங்காத வண்ணம் நல்ல வடிகால் வசதி அமைத்து கொடுக்கவும். அதோடு தொடர்ந்து மழை இருப்பதால் காலையில் மலர்களை அறுவடை செய்ய சிரமமாக இருப்பின் மாலை நேரங்களில் அறுவடை செய்யலாம்.
- மழை இருப்பதால் இளம் இரப்பர், பழ மரங்கள் மற்றும் வாழை மரங்களில் நீர் தேங்காமல் நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும்.
- தென்னை மரங்களுக்கு உரிய வடிகால் வசதி செய்யவும். இல்லாவிடில் தொடர் மழையால் தென்னையின் வேரை பூஞ்சாள நோய் தாக்க வாய்ப்புள்ளது.
- மழை இருப்பதால் ஒரு வருட பருவமான இலவங்கப்பட்டை மரகன்றுகளை நடவு செய்யலாம்.

Sd/-
பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.வே.ப.க., கோவை